**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 16.12.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் மண் வளப்பாதுகாப்பிற்கு சமச்சீர் உரமிடல் பயிற்சி

மண் வளம் என்பது பயிர் வளர்ச்சிக்குத் தேவையான இன்றியமையாத ஊட்டச்சத்துக்கள் போதுமான அளவில், பயிர்கள் எடுத்துக் கொள்ளும் நிலையில் இருப்பதாகும். வளமான மண்ணே உணவு உற்பத்திக்கு அடிப்படையாகும். மண்ணின் வளத்தைப் பேணிப் பாதுகாப்பது மனித இனத்தின் முக்கியக் கடமையாகும்.

எனவே மண்ணின் நலம் மற்றும் வளத்தைப் பேணுவதின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில் ஒவ்வொருவருடமும் டிசம்பர் 5 ஆம் நாள் “உலகமண்” தினமாக கொண்டாடப்படுகிறது. எனவே உலக மண் தினத்தையொட்டி பேரூர் வட்டம் சாடிவயல்பதி மலைவாழ் கிராமத்தில் “மண் வளப்பாதுகாப்பிற்கு சமச்சீர் உரமிடல்” குறித்த பயிற்சி 14.12.2022 நடத்தப்பட்டது. இப்பயிற்சியானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைகழகம் மண்ணியியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் இயங்கி வரும் மண் ஆய்வு மற்றும் பயிர் ஏற்புத்திறன் தொடர்பளவுத்திட்டம் மற்றும் ஐ.சி.ஏ.ஆர் - இந்திய மண்ணியல் நிறுவனம், போபால் ஆகியவற்றால் சேர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

முனைவர். சு. மரகதம், பேராசிரியர் (மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல்) மற்றும் திட்டபொறுப்பாளர் அவர்கள் நிகழ்விற்கு வந்திருந்த உழவர் பெருமக்களை வரவேற்று மண்ணின் தன்மை, மண் உருவாதல் மற்றும் மண் வளப்பாதுகாப்பு பற்றி எடுத்துரைத்தார். அடுத்ததாக முனைவர். ப. மாலதி, இணைப்பேராசிரியர் (மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல்) அவர்கள் ஒருங்கிணைந்த பயிர் ஊட்டச்சத்து முறையில் மண் வளம் மற்றும் மகசூல் இலக்கிற்கேற்ப பயிர் சத்து மேலாண்மை பற்றி விளக்கம் அளித்தார். முனைவர்.இரா.இராஜேஸ்வரி, உதவிப் பேராசிரியர் அவர்கள் ஒருங்கிணைந்த உரப்பரிந்துரைக்கான முடிவு காண துணை மென்பொருள் (டெசிபர்) பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். பயிர்க் கழிவுகளின் மறுசுழற்சி மூலம் மண் வளப்பாதுகாப்பு பற்றி முனைவர் வி. தவமணி இணைப் பேராசிரியர் (சுற்றுச் சூழல் அறிவியல்) வலியுறுத்தினார்.

இதில் முனைவர் அர.சாந்தி , பேராசிரியர் மற்றும் தலைவர், மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை அவர்கள் சாடிவயல்பதி கிராம விவசாய நிலங்களின் மண்வளம் பற்றியும் மண் வளத்திற்கும் மகசூல் இலக்கிற்கும் ஏற்ப பயிர்ச்சத்து மேலாண்மையை கடைபிடிப்பதால் மண்வளம் பாதுகாக்கப்படும் என்றும் எடுத்துரைத்தார். முனைவர் ப. பாலசுப்ரமணியம், இயக்குனர் (இயற்கை வள மேலாண்மை இயக்ககம்) அவர்கள் தலைமை உரையில் மண்வள அட்டையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கினார். மேலும் பல்வேறு தொழில்நுட்ப உத்திகள் மூலம் மண்வளத்தைப் பாதுகாப்பது பற்றியும் எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியின் அங்கமாக மண் ஆய்வு மற்றும் பயிர் ஏற்புத்திறன் தொடர்பளவுத் திட்டத்தின் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் கருத்துக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டது. நிறைவாக முனைவர். ப. மாலதி, இணைப் பேராசிரியர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்த பயிற்சியில் 44 உழவர் பெருமக்கள் பங்கேற்று கலந்துரையாடி பயனடைந்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**